IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No. 3167/2025

Deposition of Witness PW1

Name : குணசேகரன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி சகுந்தலா எனக்கு 6-7 வருடங்களாக எனக்கு தெரியும். எனது மனைவி திருச்செங்கோட்டில் உள்ள நூலகத்தில் பணிபுரிந்து வருகிறார். அதனால் எனது மனைவி மூலமாக எதிரி எனக்கு பழக்கம். எதிரி எப்போது பணம் கேட்டார் என்றால் 03.02.2023 அன்று கேட்டார். 05.03.2023 அன்று நான் பணம் கொடுத்தேன். கடன் தொகை 4 லட்சம் என்பது பெரிய தொகை என்றால் இல்லை. நான் எனது வீட்டு பக்கத்தில் ஏல சீட்டு போட்டு இருந்தேன். அதை வைத்து கொடுத்தேன். ஏல சீட்டு போட்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. கையில் கொடுத்து வாங்குவோம் ஆவணம் எதுவும் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் இல்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.10 16:46:30 +0530

எனக்கு மாத வருமானம் ரூ.30,000-35,000, வரை வருகிறது. எனது மனைவியின் சம்பளமும் வருகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 21.08.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது .

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.10 16:46:35 +0530